மகசூல் • ர.மணிரெத்தினம் • படங்கள்: மோ.சிவசக்தி ஐஸ்வர்யா

# ஆடு, கோழி, மீன், பாரம்பர்ய நெல் ரகங்கள்... 150 ஏக்கரில் ஒருங்கிணைந்த பண்ணை!

## ஆண்டுக்கு ரூ.66 லட்சம் லாபம்!

விவசாயமும் கால்நடை வளர்ப்பும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. பயிர் சாகுபடியோடு... ஆடு, கோழி, மாடு, மீன் என கால்நடைகளையும் சேர்த்து ஒருங்கிணைந்த பண்ணையாக அமைத்தால், ஒன்று கைவிட்டாலும் இன்னொன்று கைகொடுத்துவிடும். வாய்ப்பிருக்கும் விவசாயிகள் இந்த சூட்சுமத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு ஒருங்கிணைந்த பண்ணை அமைத்துச் சிறப்பான லாபம் ஈட்டி வருகிறார்கள். அத்தகையோரில் ஒருவர்தான், திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஜியாவுதீன்.

கூத்தாநல்லூர் அருகே உள்ள பூதமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ளது, ஜியாவுதீனின் 'ஏ.எம்.இசட் (AMZ) ஒருங்கிணைந்த இயற்கை வேளாண் பண்ணை'. சுமார் 150 ஏக்கர் பரப்பில் பரந்து விரிந்து பிரமாண்டமாக இருக்கிறது, இந்தப் பண்ணை. கடந்த 16 ஆண்டுகளாக பாரம்பர்ய நெல் ரகங்களை இயற்கை முறையில் சாகுபடி செய்து வரும் ஜியாவுதீன், அரிசியாக மதிப்புக்கூட்டி இந்தியா முழுவதும் விநியோகம் செய்து வருகிறார். அதோடு, நாட்டுக்கோழிகள், செம்மறி ஆடுகள், நாட்டு மாடுகள் என வளர்த்து வருகிறார்.

### சொந்த நிலம் 70 ஏக்கர்... குத்தகை நிலம் 80 ஏக்கர்!

ஒரு காலைப்பொழுதில் ஜியாவுதீனின் பண்ணையில் அவரைச் சந்தித்துப் பேசினோம். "என்னோட சொந்த ஊர் இதுதான். அப்பா, 15 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செஞ்சுக் கிட்டிருந்தார். நான் சின்ன வயசிலேயே அப்பாவோட சேர்ந்து விவசாய வேலைகள் செய்வேன். எனக்கு விவசாயம் செய்யணும்னு ஆசை இருந்தாலும், 'மகன் வெளிநாட்டுக்கு வேலைக்குப் போகணும்'னு அப்பா ஆசைப் பட்டார். அதனால படிச்சுட்டு துபாய்க்கு வேலைக்குப் போயிட்டேன். படிப்படியா முன்னேறி, துபாயில் ஹார்டுவேர்ஸ், கார்மென்ட்ஸ் தொழில்களை ஆரம்பிச்சேன்.

இருந்தாலும் விவசாயத்தின் மேல் இருந்த ஆசையால், இங்கே 55 ஏக்கர் நிலத்தை வாங்கி னேன். அப்பாவின் 15 ஏக்கர் நிலத்தையும் சேர்த்து மொத்தம் 70 ஏக்கர் நிலத்தில், 2010-ம் வருஷம் இயற்கை விவசாயத்தை ஆரம்பிச்சேன். அப்படியே பக்கத்தில் 80 ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்குப் பிடிச்சு இப்போ மொத்தம் 150 ஏக்கர் பரப்பில் ஒருங் கிணைந்த பண்ணையத்தை உருவாக்கி


dVYAWhpkCw



ஜியாவுதீன்

யிருக்கேன்'' என்று முன்னுரை கொடுத்த ஜியாவுதீன், பண்ணை அமைப்பு மற்றும் நெல் சாகுபடி குறித்துச் சொல்ல ஆரம்பித்தார்.

### 110 ஏக்கர் பரப்பில் பாரம்பர்ய நெல் ரகங்கள்!

“மொத்தம் 110 ஏக்கர் பரப்பில் பாரம்பர்ய நெல் ரகங்களைச் சாகுபடி செய்றேன். 15 ஏக்கர் பரப்பில் நாட்டுக்கோழிகளின் தீவனத் தேவைக்காக வீரிய நெல் ரகங்களை சாகுபடி செய்றேன். ஏழு ஏக்கர் பரப்பில் குளங்கள் அமைச்சு மீன் வளர்க்குறேன். மூணு ஏக்கர் பரப்பில் கால்நடைகளுக்கான பசுந்தீவனம் சாகுபடி செய்றேன். மீதி 15 ஏக்கர் பரப்பில், நாட்டுக்கோழிப் பண்ணை, ஆட்டுக் கொட்டகை, மாட்டுக் கொட்டகை, குடோன், வைக்கோல் போர், நெல் தூய்மைப்படுத்தும் அறை, அலுவலகம்னு அமைச்சிருக்கேன். இந்த 15 ஏக்கர் பரப்பில் நிழலும் குளிர்ச்சியான சூழலும் இருக்கணும்கிறதுக்காக வேம்பு, மைசூர் வேங்கை, செஞ்சந்தனம், மகோகனி, பூவரசு, தேக்குனு 1,000 மரங்களுக்கு மேல் நடவு செஞ்சிருக்கேன். நெல் சாகுபடி வயலில்



dVYAWhpkCw






வரப்புப்பயிரா பனை மரங்களை வளர்க்கறேன். சம்பா பட்டத்தில் ஒரு போகம் மட்டும்தான் பாரம்பர்ய நெல் ரகங்களை சாகுபடி செய்றேன். கருப்புக் கவுனி, கருங்குறுவை, அஸ்ஸாம் கருப்புக் கவுனி, சீரகச் சம்பா, தாய்லாந்து கருப்புக் கவுனி, பர்மா கருப்புக் கவுனி, சைனா கருப்புக் கவுனி, காட்டுயானம், மாப்பிள்ளைச் சம்பா, பூங்கார், இலுப்பை பூ சம்பா, தங்கச் சம்பா, சொர்ண மசூரி, மைசூர் மல்லினு பலவிதமான நெல் ரகங்களை சாகுபடி செய்றேன்.

## ஆண்டுக்கொரு முறை ஆட்டுக்கிடை!

மண்ணை வளப்படுத்த, வருஷத்துக்கு ஒரு தடவை கோடைக்காலத்தில் ஆட்டுக்கிடை போடுவோம். சம்பா பட்டம் நெருங்குறப்போ, அடியுரமா ஒரு ஏக்கருக்கு 500 கிலோ எரு போடுவேன். அதில் ஆட்டு எரு, மாட்டு எரு, கோழி எரு, குதிரை எருனு எல்லாம் கலந்திருக்கும். வேர் வழி ஊட்டமாக பஞ்சகவ்யா பயன்படுத்துறேன். இலைவழி ஊட்டத்துக்கு மீன் அமினோ அமிலம் பயன்படுத்துறேன். அதிக பரப்புங்கிறதால ட்ரோன் மூலமாத்தான் இடுபொருள் தெளிக்கிறேன். பெரும்பாலும் இங்க பூச்சி, நோய்த்தாக்குதல் வர்றதில்லை. எப்போவாவது பூச்சிகள் தென்பட்டால், மூலிகை பூச்சி விரட்டி தெளிச்சு கட்டுப்படுத்திடுவேன்.

## குறைவான பராமரிப்பு... உத்தரவாதமான லாபம்!

இந்தப் பகுதியில் விவசாயப் பணியாளர்களுக்குத் தட்டுப்பாடு இருக்கிறதால, கான்ட்ராக்டர் மூலமா வட மாநிலத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியிருக்கேன். அவங்களே எல்லா வேலையும் பார்த்திடுவாங்க. பராமரிப்புக்கு பெரிசா அலட்டிக்கிறதில்லை. அதனால, உற்பத்திக்கான செலவு ரொம்பக்குறைவு. இதனால, மகசூல் குறைவானாலும் உத்தரவாதமான லாபம் உறுதி. அதிக பரப்பில் பயிர் சாகுபடி செய்யும்போது முடிஞ்சளவுக்கு குறைவான பராமரிப்பு செய்றதுதான் நல்லது. இது, என்னோட அனுபவம்.

ஒரு ஏக்கர் பரப்பில் சராசரியா 21 மூட்டை (60 கிலோ) நெல் மகசூல் கிடைக்குது. மொத்தம் 1,260 கிலோ நெல்லை அரைத் தீட்டல் முறை



dVYAWhpkCw

## ஜியாவுதீன் சொல்லும் வருமானக் கணக்கு!

பண்ணைத்தொழில் மூலம் கிடைக்கும் வருமானம் குறித்துப் பேசிய ஜியாவுதீன், “ஒரு செம்மறி ஆடு விற்பனை மூலம் 20,000 ரூபாய் வருமானம் கிடைக்கும். கொள்முதல் விலை, மருத்துவம், தீவனம், பராமரிப்பு உள்ளிட்ட செலவுகள் போக, ஒரு செம்மறி ஆடு மூலம் 5,000 ரூபாய் லாபமா  நிக்கும். ஒரு வருஷத்தில் 100 செம்மறி ஆடுகள் விற்பனை மூலமா 5 லட்சம் ரூபாய் லாபம் கிடைககுது.

தினமும் 600 நாட்டுக்கோழிகள் முட்டைகள் வீதம் ஒரு மாசத்துக்கு சராசரியா 18,000 முட்டைகள் விற்பனை செய்றேன். ஒரு முட்டை 12 ரூபாய்னு விற்பனை செய்றது மூலமா 2 லட்சத்து 16,000 ரூபாய் வருமானம் கிடைக்குது. முட்டை விற்பனை மூலம் ஒரு வருஷத்துக்கு 25 லட்சத்து 92,000 ரூபாய் வருமானம் கிடைக்கும்.

கோழிக்குஞ்சுகளை 70 நாள் வயதில் ஒரு குஞ்சு 150 ரூபாய்னு விற்பனை செய்றேன். ஒரு மாசத்துக்கு சராசரியா 1,000 கோழிக்குஞ்சுகள்னு ஒரு வருஷத்துக்கு 12,,000 குஞ்சுகள் விற்பனை மூலம், 18 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும்.

ஒன்றரை வயது ஆகி, முட்டையிடும் திறன் குறைகிற தாய்க்கோழிகளை இறைச்சிக்காக விற்பனை செய்துடுவேன். ஒரு கோழிக்கு 400 ரூபாய் விலை கிடைக்கும். ஒரு மாசத்துக்கு 300 கோழிகள்னு ஒரு வருஷத்துக்கு 3,600 கோழிகள் விற்பனை மூலம், 14 லட்சத்து 40,000 ரூபாய் வருமானம் கிடைக்கும். ஆக, 4,000 நாட்டுக்கோழிகள் வளர்ப்பு மூலமா... வருஷத்துக்கு 58 லட்சத்து 32,000 ரூபாய் வருமானம் கிடைக்கும். இதில் எல்லா செலவுகளும் போக, 20 லட்ச ரூபாய் வரை லாபமா கிடைக்கும்.

ஒரு மீன் சராசரியா ஒரு கிலோ விதம் ஏக்கருக்கு 1,500 கிலோ மீன் கிடைக்கும். ஒரு கிலோ உயிர் மீன் 150 ரூபாய்னு விற்பனை செய்றது மூலமா 2 லட்சத்து 25,000 ரூபாய் வருமானம் கிடைக்கும். இதில் எல்லா செலவும் போக, 1 லட்சத்து 50,000 ரூபாய் லாபம் கிடைக்கும். மொத்தம் 7 ஏக்கர் குளங்கள் மூலம் மொத்தம் 10 லட்சத்து 50,000 ரூபாய் லாபம் கிடைக்கும்.

மொத்தமா 150 ஏக்கர் பரப்பில் ஒரு வருஷத்துக்கு 66 லட்சத்து 30,000 ரூபாய் லாபம் கிடைக்குது. எந்தவித ஒளிவு மறைவும் இல்லாமல், வருமான வரித்துறைக்கு ஆண்டுதோறும் கணக்குகள் சமர்ப்பிக்கிறேன். நெல்லை மதிப்புக்கூட்டி அரிசி, அவல், சத்து மாவுனு விற்பனை செய்றதால், ஜி.எஸ்.டி-யையும் முறையா செலுத்துறேன்” என்றார்.

webview



யில் அரைச்சா, 840 கிலோ அரிசி கிடைக்கும். ஒரு கிலோ 90 ரூபாய்னு விற்பனை செய்றப்போ... 75 ஆயிரத்து 600 ரூபாய் வருமானம் கிடைக்கும். வைக்கோலின் விலையையும் சேர்த்தால் 78,600 ரூபாய் வருமானம் கிடைக்கும். இதில் எல்லா செலவுகளும் போக, 28,000 ரூபாய் லாபம் கிடைக்கும். மொத்தம் 110 ஏக்கர் பரப்பில் ஒரு வருஷத்துக்கு 30 லட்சத்து 80,000 ரூபாய் லாபம் கிடைக்கிது” என்ற ஜியாவுதீன், கால்நடை வளர்ப்பு குறித்துச் சொல்ல ஆரம்பித்தார்.

### குட்டியாக வாங்கி வளர்த்து விற்பனை!

“ஒவ்வொரு வருஷமும் மழைக்காலம் முடிஞ்சதும் 100 செம்மறி ஆட்டுக்குட்டிகள்



dVYAWhpkCw

வாங்கி, வளர்த்து விற்பனை செஞ்சுடுவேன். ஐந்து மாத வயதில் சுமார் 25 கிலோ எடையில் ஒரு செம்மறி குட்டி 10,000 ரூபாய்னு வாங்குவேன். அதை எட்டு மாசம் வளர்த்து 50 கிலோ எடை வந்தவுடன் விற்பனை செய்வேன். ஒரு கிலோ உயிர் எடைக்கு 400 ரூபாய் விலை கிடைக்கும்.

இயற்கை இடுபொருள்கள் தயாரிப்புக்காக ராத்தி, கிர், உம்பளச்சேரி இனங்களைச் சேர்ந்த 25 நாட்டு மாடுகள் வளர்க்கறேன். தினமும் சராசரியா 15 லிட்டர் பால் கிடைக்கும். பாலை சொந்தத் தேவைக்குப் பயன்படுத்திக் கிறேன்.

> **சரியான திட்டமிடலுடன் ஒருங்கிணைந்த பண்ணை அமைத்துச் செயல்பட்டால் நல்ல லாபம் கிடைக்கும். மண்ணையும் காப்பாத்தலாம். மக்களுக்கு ஆரோக்கியமான உணவு கொடுத்து மக்களையும் காப்பாத்தலாம்.**

## 4,000 நாட்டுக்கோழிகள்!

சோனாலி ரகத்தில் 4,000 நாட்டுக்கோழிகள் வளர்க்குறேன். எப்பவும் பண்ணையில் 3,500 தாய்க்கோழிகளும், 500 சேவல்களும் இருக்கிற மாதிரி பராமரிக்கிறேன். கோழிகளுக்கு இங்கே விளைகிற நெல்லை தீவனமாக் கொடுக்கறேன். அதில்லாமல் கம்பு, கேழ்வரகு, கடலைப்பிண்ணாக்கு, தவிடு கலந்து அடர் தீவனமும் கொடுக்கறேன்.

வாரம் ஒரு முறை பரங்கி, பூசணி, தர்பூசணி, நாட்டுவெங்காயம், பூண்டு, கேரட் வேப்பிலை எல்லாத்தையும் கலந்து கொடுப்பேன். இதனால், கோழிகளுக்கு நோய் எதிர்ப்பாற்றல் அதிகரிக்குது. வாரம் ஒருமுறை, கால்நடை மருத்துவர் இங்கே வந்து கோழிகளைப் பார்வையிட்டு, உரிய ஆலோசனைகள் வழங்கு வார். தேவைக்கு ஏற்ப தடுப் பூசிகளையும் போட்டுடுவேன்.



ஏழு ஏக்கர் பரப்பில் குளங்கள் வெட்டி ரோகு, கட்லா, மிர்கால், சிசி, புல் கெண்டை ரக மீன்கள் வளர்க்கிறேன். ஒரு ஏக்கர் குளத்துக்கு 2,000 குஞ்சுகள் விட்டால், 1,500 குஞ்சுகள் தேறி வந்திடும். பத்து மாசம் வளர்த்து ஒரு மீன் ஒரு கிலோ எடை வர்ற சமயத்தில் பிடிச்சு விற்பனை செய்வேன்” என்ற ஜியாவுதீன் நிறைவாக,

## 73 வயதிலும் தளராத உழைப்பு!

“நான் 57 வயசில் இயற்கை விவசாயத்தில் இறங்கினேன். இப்போ 73 வயசாகுது. ஆனாலும், ஆரம்பத்தில் எப்படி உற்சாகமா உழைச்சேனோ அதே உற்சாகத்தோடு இப்பவும் உழைச்சிட்டிருக்கேன். நிறைய விவசாயிகள் இயற்கை விவசாயத்துக்கு மாற தயங்குறாங்க.

இயற்கை விவசாயத்தை செஞ்சு பார்த்தால் தான் அருமை தெரியும். சரியான திட்ட மிடலுடன் ஒருங்கிணைந்த பண்ணை அமைத்துச் செயல்பட்டால் நல்ல லாபம் கிடைக்கும். மண்ணையும் காப்பாத்தலாம். மக்களுக்கு ஆரோக்கியமான உணவு கொடுத்து மக்களையும் காப்பாத்தலாம்.

விவசாயம் தொழில் மட்டும் கிடையாது. இயற்கையோடு இணைந்து வாழுகிற ஒரு வாழ்க்கை முறை. இப்போ என் பண்ணை வேளாண்மை படிக்கும் மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் பயிற்சிக் கூடமாகவும் இருக்கு” என்று பெருமையுடன் சொல்லி விடைகொடுத்தார்.

**தொடர்புக்கு: ஜியாவுதீன்,**
**செல்போன் : 99949 52099**



dVYAWhpkCw